# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 181/மா/2022**

**நாள் : 30.11.2022**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் 5.10.2022 நாளிட்ட மனு 7.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 181/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

I am natively residing at the above-said address and I belong to the Sholinganallur Constituency, which falls under Chengalpattu District. A pond located at P.T.C. Quarters, Okkiyam Thoraipakkam, which is called as Rettaikulam, comprised in Survey No.211/1 Old Survey No.211/B. The aforesaid said Survey Numbers belongs to Government Poramboke and the water from the said Pond (Rettaikulam) drains into the South Buckingham Canal via few other ponds.

The above mentioned Pond (Rettaikulam) has been encroached and Government Offices are built on the same. The Corporation Office Building, Ward No.194 (Zone XV) and Amma Unavagam Building, built on the encroached pond which negates the ability to drain rainwater. This will prevent rainwater from draining and make the neighbourhood waterlogged.

In this connection, the Hon'ble High Court has already passed an several orders that severe action should be taken against encroachment on water bodies.

Therefore, I request the concerned Authorities to remove the encroachment made by constructing Government Offices in the aforesaid Pond (Rettaikulam) in Survey No.211/1, and Old Survey No.211/B situated at P.T.C. Quarters, Okkiyam Thoraipakkam.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 15ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றத்தால் 17.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 29.10.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்**:

உதவி பொறியாளர், வார்டு 195, மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள புகார் தொடர்பாக சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 28.10.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக நில அளவையர்களை கொண்டு ஆக்கிரமிப்பு எல்லைகளை கண்டறிந்து நில அளவை செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புலங்களில் எல்லைகள் நிர்ணயம் செய்த பிறகு, அவ்விடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் கணக்கிடப்பட்டு அவைகளை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் உரிய முறைகளின்படி வடகிழக்கு பருவமழை காலம் முடிந்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. முறையீட்டு மனுதாரர் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம் - 15 ஆகியோரை 31.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 31.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலகக் கட்டடம் அங்குள்ள ரெட்டைக் குளத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. 2015ல் கட்டப்பட்ட மேற்கண்ட மாநகராட்சி கட்டடத்தை கட்டும்போது அங்குள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தும், எதிர்ப்பை மீறி மாநகராட்சி அலுவலகம் கட்டப்பட்டது. இது குறித்து பல்வேறு புகார் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பு குறித்து தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 3.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் செயற்பொறியாளர் 31.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்**;

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக, சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு 28.10.2022 அன்று நில அளவை செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கட்டடம் நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை எனவும், ஏரிக்கு செல்லும் வழியில்தான் கட்டப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட மாநகராட்சி கட்டடம் தொடர்பாக, அரசிடமிருந்து Ratification அல்லது ஆணை ஏதேனும் பெறப்பட்டுள்ளதா என்கின்ற விவரத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் (Main Office) பெற்று இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இது குறித்த விவரங்களையும், மேலும், இந்நேர்வு தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு பதிவாகி, அதன் மீது தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது குறித்து, அலுவலகப் பதிவுகளை ஆராய்ந்து அதன் விவரங்களையும் இம்முறை மன்றத்தில் இன்னும் ஒரு மாத காலத்தில் சமர்ப்பிக்கிறேன் என்றும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன்

29.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் தனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் வார்டு எண்.194, மண்டலம் -15ல் சர்வே எண்.211/1, (பழைய எண்.211/Bல் உள்ள ரெட்டைக் குளத்தை ஆக்கிரமித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15 அலுவலகம் மற்றும் அம்மா உணவகம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து அதனை அகற்றிட கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு சர்வே எண்.211/1, (பழைய எண்.211/B) என்பது ரெட்டைகுளம் என்று FMB sketch-ன் மூலம் அறிய முடிகிறது.

மண்டலம் - 15ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.211/1 உள்ள ரெட்டைக் குளம் தொடர்பாக 8.2.2005 நாளிட்டு வெளியிடப்பட்ட அரசாணை 60ஐ, R&DM Department, எதிர்த்து ஏற்கனவே திருமதி சுசிதா என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.35942 of 2005 தொடரப்பட்டு அதன் மீது சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய 18.01.2022 நாளிட்ட தீர்ப்பின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். தீர்ப்பின் விவரங்கள் பின்வருமாறு :-

"4. By impugned G.O. Ms. No.60, Revenue (Ni.Mu.4 (1) Department, dated 8.2.2005, the Government permitted Tamil Nadu Road Development Company to enter upon this land to execute the project proposed to be put upon the land. The case of the respondents is that the tank in this land is an abandoned tank, and it is being used as a dumping yard and sewage collection pond, the abandoned tank, over a period of time, has deteriorated leading to health hazards. Because of long disuse and continuous neglect, it has silted up and completely lost its form. The Revenue Authorities recommended the grant of enter upon permission only after inspecting the land during which they became alive to the need to put it to a better use.

5. By order dated 6.12.2005, the Director, Centre for Water Resources, Guindy, Chennai was appointed as the Commissioner to inspect the site where the temple tank is located, and to submit a report about the condition of the tank. Accordingly, the Director, Centre for water Resources, inspected the site and submitted a report, and the conclusions of the Director are as follows:-

i. The catchment area available is 26,781 $m^2$. The present capacity of the tank is 1,861 $m^3$. The annual runoff potential is 8,034 $m^3$.
ii. There is no specific inlet or surplus channels for the temple tank.
iii. The water from the tank is not directly being used by the public/cattle or for any other purpose.
iv. The water contained in the tank is unfit for human consumption.
v. The tank area has not been maintained properly over the years and has been used as a dumping yard.
vi. When such water bodies are not maintained properly, they are likely to be encroached.
vii. From the interaction with the public, the team learnt that but for the recent heavy rains, the tank would have remained dry.
viii. The tank area has not access from three sides namely, South, North and Eastern sides and could be accessed only from the Old Mahabalipuram Road side.

ix. The tank doesn't contain any built up structures like steps to enter, etc, but contains building debris dumped into it.
x. The area is surrounded by three other bigger sized tanks, two in the East and one in the West, which will be recharging the ground water in the area and the recharge contribution of this temple tank will be insignificant.
xi. The temple tank is in a dilapidated condition.

6. It is clearly seen from the report of the Director that the temple tank is an abandoned tank that is being used as a dumping yard and sewage collection pond. It is neither used a drinking water tank nor as an irrigation source. The proposal for use of the land for putting up a shopping complex would not affect the interest of the villagers, on the other hand it would help in rehabilitation of families of displaced persons whose lives have been affected.

7. In the circumstances, we see no ground to entertain this petition. The petition is dismissed. No costs, consequently, W.P.M. Ps are also dismissed.

மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில், இம்மனு மீது மேல் நடவடிக்கையை எடுக்கும் நிலை எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
வழக்கறிஞர்,
எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம் (OMR)
சென்னை – 600 097.
2. மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, சென்னை.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.